


தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி




மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வெள்ளி, செப்டம்பர் 11, 2026 | இதழ் 151

## தவெக தலைமையிலான கூட்டணிக்கு மதச்சார்பற்ற சமூக நீதி வெற்றி கூட்டணி என பெயர் அறிவிப்பு

சென்னை, 11 செப்டம்பர் 2026: வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதலமைச்சர் விஜய் லண்டனுக்கு இன்று புறப்பட்டுச் செல்கிறார். தமிழகத்தில் ஆட்சி அமைத்த பிறகு முதலமைச்சர் விஜய் முதன்முறையாக வெளிநாடு பயணம் மேற்கொள்கிறார்.

தமிழகத்தை 2036-ம் ஆண்டுக்குள் 1.5 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்றுவதற்குத் தமிழக அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. அதன்படி தவெக ஆட்சிக்கு வந்தது முதல் 100 நாட்களில் 104 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. இதன் மூலம் ரூ.1 லட்சத்து 2,514 கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. 1 லட்சத்து 21,788 பேருக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமிழகத்துக்கு வெளிநாட்டு முதலீடுகளை மேலும் ஈர்ப்பதற்காக முதலமைச்சர் விஜய் லண்டனுக்கு இன்று புறப்பட்டு செல்கிறார். இதற்காக இன்று இரவு 10 மணியளவில் சென்னையில் இருந்து எமிரேட்ஸ் விமானம் மூலம் துபாய் செல்லும் முதலமைச்சர் விஜய், அங்கிருந்து லண்டன் செல்கிறார்.

லண்டனில் நடைபெறும் முதலீட்டாளர்கள் சந்திப்பில் பங்கேற்கும் முதலமைச்சர் விஜய், பல்வேறு தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து தமிழகத்தில் தொழில் தொடங்க வருமாறு அழைப்பு விடுக்கவுள்ளதாகக் கூறப்படுகிறது.

மேலும், அங்கு தனது நண்பர் நடிகர் அஜித்குமாரின் கார் பந்தயத்தை முதல்வர் பார்வையிட இருப்பதாகக் கூறப்படுகிறது. லண்டனில் வசிக்கும் தமிழர்களையும் சந்தித்து முதல்வர் விஜய் கலந்துரையாட உள்ளார்.

இதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்ள தமிழக அரசின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா ஏற்கனவே லண்டன் சென்றுவிட்டனர். தொழில் துறை அமைச்சர் கீர்த்தனாவும் லண்டனுக்கு செல்கிறார்.

லண்டன் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு, அங்கிருந்து புறப்பட்டு துபாய் வழியாகச் 17-ம் தேதி




காலை முதலமைச்சர் விஜய் சென்னை வருகிறார்.

முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு விஜய் மேற்கொள்ளும் முதல் வெளிநாட்டு அரசு முறைப் பயணம் இதுவாகும். தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாட்டுக்கும், ஆந்திரா உள்ளிட்ட சில மாநிலங்களுக்கும் இடையே கடும் போட்டி நிலவி வருகிறது.

எனவேதான் புதிய முதலீடுகளை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசு தீவிரப்படுத்தியுள்ளது.

## குஜராத் முதல்வர் முதல் பிரதமர் வரை பொதுவாழ்வில் 25 ஆண்டு நிறைவு செய்கிறார் மோடி: பாஜ ஒரு மாத காலம் பிரசாரம்

சென்னை, 11 செப்டம்பர் 2026: பிரதமர் மோடி கடந்த 2001ம் ஆண்டு அக்டோபர் 7ம் தேதி குஜராத் முதல்வராக முதல் முறையாக பொறுப்பேற்றார். இதுவே அவரது முதல் அரசு தலைமைப் பொறுப்பாகும்.

அதன் பின் 13 ஆண்டுகள் குஜராத் முதல்வராக நீடித்த மோடி, கடந்த 2014 மே 26ம் தேதி நாட்டின் பிரதமராக பதவியேற்றார். தொடர்ந்து 3வது முறையாக பிரதமராக நீடித்து வரும் அவர் வரும் அக்டோபர் 7ம் தேதி பொதுவாழ்வில் தனது 25 ஆண்டுகளை நிறைவு செய்கிறார். இதை சிறப்பாக கொண்டாட பாஜ முடிவு செய்துள்ளது.

இது குறித்து பாஜ தலைமையகத்தில் அக்கட்சியின் தேசிய தலைவர் நிதின் நபின் செய்தியாளர்களிடம் கூறியதாவது: மோடி ஒரு சாதாரண தொண்டனாக தொடங்கி இன்று நாட்டின் பிரதான சேவகராக தனது பணிகளை முன்னெடுத்துச் செல்கிறார்.

வரும் அக்டோபர் 7ம் தேதி அவர் பொதுவாழ்வில் 25 ஆண்டுகளை நிறைவு செய்கிறார். இதை சிறப்பாக கொண்டாடும் வகையில், மோடியின் பிறந்த நாளான வரும் 17ம் தேதி முதல் சேவைக்கான உறுதிமொழி இயக்கம் என்ற ஒரு மாத கால பிரசாரத்தை பாஜ தொடங்க உள்ளது.

மோடியின் பிறந்த நாள் சேவை தினமாக கடைபிடிக்கப்படும். நாடு முழுவதும் ரத்ததான முகாம்கள் நடத்தப்படும். 17ம் தேதி மாலை ஆசீர்வாத விளக்கு என்ற நிகழ்ச்சி நடைபெறும். இதில், மோடியின் 25 ஆண்டு கால பொதுச் சேவைக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக அரசு திட்ட பயனாளிகள் அகல் விளக்குகளை ஏற்றுவார்கள். அக்டோபர் 7 அன்று, மாவட்ட தலைமையகங்கள் மற்றும் நாடு முழுவதும் சுமார் 1,000 இடங்களில் வளர்ச்சி அடைந்த இந்தியா 2047 குறித்த கூட்டு உறுதிமொழி ஏற்கப்படும்.

வளர்ச்சி அடைந்த இந்தியா எனும் தொலைநோக்குப் பார்வையை மையமாகக் கொண்டு, வரும் 17 முதல் அக்டோபர் 7 வரை பள்ளிகளில் ஓவியம் மற்றும் பேச்சுப் போட்டிகளை பாஜ ஏற்பாடு செய்யும். போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு மாநில முதல்வர்கள், ஒன்றிய அமைச்சர்கள் மூலம் சான்றிதழ்கள் வழங்கப்படும்.



அரசு நலத்திட்டங்களால் வாழ்க்கையில் மாற்றம் கண்டவர்களின் கதைகள் இசை, நாடகம் மற்றும் தெருக்கூத்துகள் மூலம் கிராமங்களுக்குக் கொண்டு செல்லப்படும். மோடி பிறந்த இடமான வத்நகருக்கும், அவரது சொந்த தொகுதியான வாரணாசிக்கும் இடையே இளைஞர்கள் தலைமையிலான 2 சேவா யாத்திரைகளை பாஜ ஏற்பாடு செய்யும். இதில் பத்து குழுக்கள் வத்நகரிலிருந்து வாரணாசிக்கும், மற்றொரு பத்து குழுக்கள் வாரணாசியிலிருந்து வத்நகருக்கும் செல்வார்கள் என்றார்.

## பட்டினப்பாக்கத்தில் தலைமைச் செயலகம் அமைக்க மீனவர்கள் எதிர்ப்பு!

சென்னை 11, செப்டம்பர் 2026: சென்னை பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதற்கு அப்பகுதி மீனவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

பட்டினப்பாக்கம், முல்லிக்குப்பம், சீனிவாசபுரம், நம்பிக்கை நகர் உள்ளிட்ட மீனவ கிராமங்களைச் சேர்ந்த சுமார் 1,000 குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என அவர்கள் தெரிவித்துள்ளனர். தலைமைச் செயலகம் அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ள இடம் முல்லிக்குப்பம் மீனவர் கிராமத்திற்கு சொந்தமானது என்றும், மூன்று, நான்கு தலைமுறைகளாக இப்பகுதியில் வசித்து வருவதாகவும் கூறியுள்ளனர்.




“எங்களை இடம் பெயரச் சொன்னால் எங்கு சென்று வாழ்வது? கடலை நம்பியே எங்கள் வாழ்வாதாரம் உள்ளது. எந்தச் சூழ்நிலையிலும் இங்கு தலைமைச் செயலகம் கட்ட அனுமதிக்க மாட்டோம்” என மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், மக்களிடம் ஆலோசிக்காமல் அரசு தன்னிச்சையாக முடிவு எடுத்துள்ளதாகவும், தேர்தல் வாக்குறுதிகளை அளித்துவிட்டு தற்போது அமைச்சர் பொறுப்பில் இருந்து நழுவுவதாகவும் அவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

பட்டா நிலத்தை அரசு கையகப்படுத்துவது நியாயமா என கேள்வி எழுப்பியுள்ள மீனவர்கள், அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து செப்டம்பர் 15 ஆம் தேதி ஆலோசனை நடத்த உள்ளதாக தெரிவித்துள்ளனர்.




## டிரம்ப்-பின் மெகா வாக்குறுதி: அமெரிக்கர்களுக்கு தலா 5,000 டாலர்! இடைக்கால தேர்தல்களில் ஜெயிக்க அதிரடி

சென்னை 11, செப்டம்பர் 2026: அமெரிக்காவில் வரும் நவம்பர் மாதம் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள், செனட் சபை உறுப்பினர்கள் மற்றும் மாகாண ஆளுநர்களுக்கான இடைக்கால தேர்தல் நடைபெற உள்ளது. இந்த நிலையில் தான் சார்ந்திருக்கும் குடியரசுக் கட்சி பிரதிநிதிகள் சபை (House of Representatives) மற்றும் செனட் சபை ஆகிய இரண்டிலும் (ஜிஓபி) பெரும்பான்மையைத் தக்க வைத்துக் கொண்டால், அமெரிக்காவின் ஒவ்வொரு 18 வயது அல்லது அதற்கும் மேற்பட்ட வயதுடைய குடிமக்களுக்கு தலா $5,000 (இந்திய மதிப்பில் சுமார் ரூ.4.7 லட்சத்திற்கும் மேல்) வழங்கப்படும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபரின் 4 ஆண்டுகால ஆட்சிப் பொறுப்பின் பாதியில் (இரண்டாம் ஆண்டில்) இந்தத் தேர்தல் நடத்தப்படுவதால், இது 'இடைகால தேர்தல்' என்று அழைக்கப்படுகிறது. அதிபர் டொனால்ட் ட்ரம்பின் தற்போதைய இரண்டாவது ஆட்சி காலத்தின் எஞ்சிய இரண்டு ஆண்டுகள் எவ்வாறு இருக்கும் என்பதை இந்த தேர்தல் முடிவுகளே தீர்மானிக்கும்.

அமெரிக்காவில் அதிபர் என்பவர் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், அவர் சட்டம் இயற்றவோ அல்லது நிதி ஒதுக்கீடு செய்யவோ நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் ஒப்புதல் கட்டாயம்



தேவை. ஒருவிழாய் நவம்பரில் நடைபெற உள்ள தேர்தல்களில் எதிர்க்கட்சி பெரும்பான்மை பெற்றுவிட்டால், தற்போதைய அதிபர் டிரம்பால் புதிய சட்டங்களையோ, வரிக் கொள்கைகளையோ அல்லது திட்டங்களையோ எளிதாக நிறைவேற்ற முடியாது. அரசின் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் எதிர்க்கட்சி முட்டுக்கட்டை போடும்.

எனவே எப்படியாவது பெரும்பான்மை பெற்றுவிட வேண்டும் என்ற நோக்கத்தில், இளைஞர்களை கவரும் வகையில் இந்த அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளார். அதே நேரம் தான் வழங்க போகும் இந்தத் தொகையைப் பெறும் அமெரிக்கர்கள், அதை கட்டாயமாக உள்நாட்டிற்குள்ளேயே மட்டும்தான் செலவிட வேண்டும் என்ற நிபந்தனையையும் வியீத்துள்ளார்.

இந்தத் திட்டத்திற்கு ஒட்டு மொத்தமாக 1 ட்ரில்லியன் டாலருக்கும் மேல் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான நிதி எவ்வாறு திரட்டப்படும் என்ற முழு விவரங்களை அவர் இன்னும் வெளியிடவில்லை.

## “மதச்சார்பற்ற சமூகநீதி வெற்றிக் கூட்டணி” - பெயரில் மட்டுமே மதச்சார்பின்மை, செயல்பாட்டில் முழுக்க குழப்பம்! - டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன்



சென்னை 11, செப்டம்பர் 2026: புதுச்சேரி மற்றும் தமிழ்நாட்டிற்கான இடைத் தேர்தலை முன்னிட்டு “மதச்சார்பற்ற சமூகநீதி வெற்றிக் கூட்டணி” என்று ஒரு கூட்டணியை அறிவித்திருக்கிறார்கள்.

ஆனால், ஐயூஎம்எல் போன்ற கட்சிகளை கூட்டணியில் வைத்துக் கொண்டு, இதை எப்படி “மதச்சார்பற்ற கூட்டணி” என்று அழைக்க முடியும்? மதச்சார்பின்மை என்பது பெயரில் வைத்துக் கொள்ளும் அடையாளமல்ல; அனைத்து மதங்களையும் சமமாக அணுகும் கொள்கையாக இருக்க வேண்டும்.

காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள், மதிமுக உள்ளிட்ட கட்சிகள் தேசிய அளவில் ஐ.என்.டி.ஐ.ஏ. கூட்டணியில் இருக்கின்றனவா, இல்லையா? மாநிலத்திற்கு ஒரு கூட்டணி, தேசிய அளவில் வேறு கூட்டணி - ஆற்றில் ஒரு கால், சேற்றில் ஒரு கால் என்ற நிலைப்பாடா?

அதிலும், “பிரதமர் வேட்பாளர் யார்?” என்ற கேள்விக்குக்கூட பதில் சொல்ல காங்கிரஸ் தயங்குகிறது. மாணிக்கம் தாகூர் போன்ற தலைவர்களே தெளிவான பதிலைச் சொல்ல முடியாத நிலை, காங்கிரஸ் கட்சிக்கு அரசியல் முதுகெலும்பு இல்லாததை வெளிப்படுத்துகிறது.

இலங்கைத் தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட காலத்தில் காங்கிரஸ் ஆட்சியை கடுமையாக விமர்சித்தவர்கள் வைகோவும் திருமாவளவனும். இன்று அதே காங்கிரஸுக்கு ஆதரவாக நிற்பது ஏன்? அன்று கொள்கை, இன்று கூட்டணி அரசியலா?

“மாநில உரிமைக்காக இந்தக் கூட்டணி” என்று கூறுகிறார்கள். ஆனால், தமிழகத்தின் முக்கியமான மாநில உரிமையான காவிரி நீர் உரிமையையே காங்கிரஸால் தமிழகத்திற்கு உறுதியாகப் பெற்றுத்தர முடியவில்லை. அப்படியிருக்கும்போது, மாநில உரிமையை காப்பாற்றுவோம் என்று எப்படி மக்களிடம் கூற முடியும்?

ஆக, இது உண்மையில் மதச்சார்பற்ற கூட்டணியா? சமூக நீதிக் கூட்டணியா? மாநில உரிமைக்கான கூட்டணியா? என்ற கேள்விகளுக்கு அவர்களிடமே தெளிவான பதில் இல்லை.

கொள்கையில் குழப்பம், கூட்டணியில் குழப்பம், பிரதமர் வேட்பாளரில் குழப்பம், மாநில உரிமையில் தோல்வி - ஒட்டுமொத்தமாக இது ஒரு “குழப்பமான கூட்டணி”.

எனவே, இதை “மனிதாபிமானமற்ற, சமூகநீதியற்ற, கொள்கையற்ற குழப்பக் கூட்டணி” என்றுதான் மக்கள் பார்க்க வேண்டியிருக்கிறது.

டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன்

## கேர் ஹெல்த் இன்சூரன்ஸ், போதுமான மருத்துவக் காப்பீடு இல்லாததை ஒரு வளர்ந்து வரும் குடும்ப நிதி அபாயமாக வலியுறுத்துகிறது

சென்னை, 11 செப்டம்பர் 2026: லட்சக்கணக்கான இந்தியக் குடும்பங்களுக்கு, ஒரே ஒரு கடுமையான நோய் பல வருட சேமிப்பை காலி செய்துவிடும். இந்தியாவின் மக்கள்தொகையில் கிட்டத்தட்ட பாதி பேர் இப்போது மருத்துவக் காப்பீடு அல்லது நிதித் திட்டத்தின் கீழ் காப்பீடு பெற்றிருந்தாலும், பல குடும்பங்கள் தொடர்ந்து போதுமான காப்பீடு இல்லாமலேயே இருக்கின்றன. இதனால், ஒரு கடுமையான நோய்க்கான மருத்துவ சிகிச்சைச் செலவை ஈடுகட்ட காப்பீட்டுத் தொகை பெரும்பாலும் போதுமானதாக இருப்பதில்லை. மருத்துவ அவசரநிலைகளின் நிதித் தாக்கத்திலிருந்து தங்களைப் பாதுகாக்கும் ஒரு அத்தியாவசியக் கருவியாக மருத்துவக் காப்பீட்டைக் கருதுமாறு கேர் ஹெல்த் இன்சூரன்ஸ் குடும்பங்களை வலியுறுத்துகிறது.

பல இந்தியர்களுக்கு, மருத்துவக் காப்பீடு ஒருமுறை வாங்கப்பட்டு, அரிதாகவே மறுஆய்வு செய்யப்படுகிறது, அல்லது அது ஒரு முதலாளியால் வழங்கப்படும் குழு பாலிசியுடன் மட்டுமே நின்றுவிடுகிறது. இதற்கிடையில், மருத்துவச் செலவுகள் பெரும்பாலான வருமானங்களை விட மிக வேகமாக அதிகரித்து வருகின்றன, மேலும் தற்போதுள்ள பாலிசிகளின் கீழ் கிடைக்கும் காப்பீட்டுத் தொகையை விரைவாக மிஞ்சிவிடக்கூடும். ஒரு காலத்தில் போதுமானதாகத் தோன்றிய ரூ. 2-5 லட்சம் மதிப்பிலான பாலிசி, இப்போது ஒரு கடுமையான நோய்க்கான சிகிச்சை முடிவடைவதற்கு முன்பே தீர்ந்துவிடக்கூடும். காப்பீடு காலாவதியாகும் போது, குடும்பங்கள் பெரும்பாலும் சேமிப்பை எடுக்கின்றன, சொத்துக்களை விற்கின்றன அல்லது கடன் வாங்குகின்றன, இது ஒரு சுகாதார நெருக்கடியை நீண்ட கால நிதிச் சுமையாக மாற்றுகிறது.

உண்மையில், இந்த விளைவுகள் தனிப்பட்ட குடும்பங்களைத் தாண்டியும் நீள்கின்றன. இந்தியாவில் நிதி நெருக்கடிக்கான முக்கிய காரணங்களில் ஒன்றாக, சொந்தப் பணத்தில் செய்யப்படும் அதிகப்படியான சுகாதாரச் செலவுகள் நீடிக்கின்றன. இதனால், குடும்பங்களின் மீள்திறனை வலுப்படுத்தவும், இந்தியாவின் உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்பு இலக்கை அடையவும் பரந்த சுகாதாரக் காப்பீட்டுத் திட்டம் அவசியமாகிறது.

உயர்ந்து வரும் சுகாதாரச் செலவுகளுக்கு எதிரான நிதிப் பாதுகாப்பை வலுப்படுத்த, கேர் ஹெல்த் இன்சூரன்ஸ் நிறுவனம் பின்வருமாறு பரிந்துரைக்கிறது: ஒவ்வொரு ஆண்டும் உங்கள் சுகாதாரக் காப்பீட்டை மதிப்பாய்வு செய்து, உங்கள் காப்பீட்டுத் தொகை உங்கள் குடும்பத்தின் சுகாதாரத் தேவைகள், வசிக்கும் நகரம் மற்றும் தற்போதைய மருத்துவ சிகிச்சைச் செலவுகளைப் பிரதிபலிப்பதை உறுதி செய்யுங்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு போதுமானதாகத் தோன்றிய ஒரு காப்பீட்டுத் தொகை, இன்றைய சிகிச்சைச் செலவுகளை ஈடு செய்யாமல் போகலாம்.


போதுமான சுகாதாரக் காப்பீடு என்பது இனி ஒரு விருப்பத் தேர்வு அல்ல, மாறாக நிதித் திட்டமிடலின் ஒரு முக்கியத் தூணாகும்.

சுகாதாரக் காப்பீட்டைத் தவறாமல் மதிப்பாய்வு செய்வதும், போதுமான காப்பீட்டை உறுதி செய்வதும், குடும்பங்கள் தங்கள் சேமிப்பைப் பாதுகாக்கவும், மருத்துவ அவசர காலங்களில் நிதி நெருக்கடியைத் தவிர்க்கவும், மேலும் சிறந்த நிதி மீள்திறனை உருவாக்கவும் உதவும்.

## 2045-க்குள் போக்குவரத்து சார்ந்த உமிழ்வு கிட்டத்தட்ட இருமடங்காக அதிகரிப்பதைத் தடுக்கும் வகையில், தரவுகளின் அடிப்படையில் அமைந்த செயல் திட்டத்தை தமிழ்நாட்டின் ஈரோடு உருவாக்கி வருகிறது: சிஇஇடபிள்யு ஆய்வு

கோயம்புத்தூர் 11, செப்டம்பர் 2026: யூகே பாக்ட்-இன் ஆதரவுடன் (சிஇஇடபிள்யு) அமைப்பு இன்று வெளியிட்ட இரண்டு புதிய ஆய்வுகளின்படி, போக்குவரத்து உமிழ்வைக் கண்காணிக்கவும், மக்கள் மற்றும் சரக்குகளின் போக்குவரத்தை மிகவும் தூய்மையான மற்றும் திறமையான முறையில் திட்டமிடவும் ஈரோடு நகரம் தரவு சார்ந்த ஒரு செயல் திட்டத்தை உருவாக்கியுள்ளது. அதிக வளர்ச்சி நிலவும் சூழலில், ஈரோட்டின் சாலைப் போக்குவரத்து உமிழ்வானது 2025-ல் 0.61 மில்லியன் டன் கார்பன்டை ஆக்சைடுக்கு இணையான அளவிலிருந்து ($MtCO_2$ e), 2045-க்குள் 1.42 $MtCO_2$ e-ஆக கிட்டத்தட்ட இருமடங்காக அதிகரிக்கக்கூடும் என்று இந்த ஆய்வுகள் தெரிவிக்கின்றன; இது இலக்கு சார்ந்த மற்றும் செலவு குறைந்த போக்குவரத்துத் திட்டமிடலின் அவசியத்தை வலியுறுத்துகிறது.

மேற்குத் தமிழ்நாட்டின் ஜவுளி மற்றும் வர்த்தக மையமான ஈரோடு, இந்தியாவின் எதிர்கால நகர்ப்புற மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றக்கூடிய, வேகமாக வளர்ந்து வரும் ‘டயர்-2’ நகரங்களில் ஒன்றாகும். இருசக்கர வாகனங்களின் ஆதிக்கம், சரக்கு போக்குவரத்து வழித்தடங்கள் மற்றும் பொதுப் போக்குவரத்து குறித்த தரவுகள் குறைவாக இருத்தல் போன்ற சவால்கள் ஈரோட்டிற்கு மட்டுமல்லாமல், இது போன்ற நூற்றுக்கணக்கான நகரங்களுக்கும் பொதுவானவை. எனவே, வாகனப் பயன்பாடு அதிகரித்து வரும் இந்தியாவின் சிறிய நகரங்கள் எவ்வாறு தூய்மையான போக்குவரத்து முறைகளைத் திட்டமிடலாம் என்பதற்கு ஈரோட்டின் அணுகுமுறை ஒரு பயனுள்ள முன்மாதிரியாக அமைகிறது. மேலும், இம்முயற்சியானது தமிழ்நாட்டின் ‘முதலமைச்சரின் ஒருங்கிணைந்த நகர்ப்புற மாற்றத் திட்டத்துடன்’




(சிஎம்ஐயூடிஎம்) ஒத்துப்போகிறது; தூய்மையான சாலைகள், பாதுகாப்பான அணுகல் வசதிகள், திறமையான சரக்கு போக்குவரத்து மற்றும் குறைந்த கார்பன் வெளியேற்றத்துடன் கூடிய போக்குவரத்து முதலீடுகள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்க நகரங்களுக்கு உதவும் வகையிலான சான்றுகளையும் இது வழங்குகிறது.

ஈரோட்டில் ‘காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறன் கொண்ட, நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய நகர்ப்புறப் போக்குவரத்து’ எனும் முன்னெடுப்பின் கீழ் சிஇஇடபிள்யு-இன் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இங்கிலாந்தின் (யூகே பாக்ட்) அமைப்பின் ஆதரவுடன் உருவாக்கப்பட்ட இந்த ஆய்வுகள், ஈரோடு நகரத்திற்கான போக்குவரத்து உமிழ்வு குறித்த அடிப்படைத் தரவு, எதிர்காலச் சூழல்களைக் கணிக்க உதவும் ஜிபிசி-தரநிலை க்கு உட்பட்ட கணக்கீட்டுக் கருவி மற்றும் நகரத்தில் வசிப்போர், தொழிலாளர்கள், சரக்கு போக்குவரத்து நடத்துநர்கள் மற்றும் முறைசாரா போக்குவரத்துப் பயனாளிகளின் பயண முறைகள் குறித்த பகுப்பாய்வு ஆகியவற்றை வழங்குகின்றன.

## தென்னிந்திய மக்கள் புரதச் சத்து விவகாரத்தில் பின்தங்கிய நிலையில் இல்லை; ஏனெனில், இங்கே ஏற்கனவே போதுமான அளவைக் கொண்டுள்ளது!

சென்னை 11, செப்டம்பர் 2026: புதிய நுகர்வோர் ஆராய்ச்சி அமைப்பானது, நாட்டின் மிகவும் பயன்படுத்தக்கூடிய, எளிதில் கிடைக்கக்கூடிய மற்றும் மலிவான புரதச்சத்தின் மூலங்களில் ஒன்றாகவும், பெரும்பாலான இந்திய சமையலறைகளில் ஏற்கனவே இருக்கும் பால் பொருட்கள் மீது மீண்டும் கவனத்தைத் திருப்புகிறது. ஒரு டம்ளர் பால், ஒரு கிண்ணம் தயிர், ஒரு துண்டு பன்னீர் என ஒவ்வொன்றும் கணிசமான, எளிதில் உடலால் உறிஞ்சப்படக்கூடிய புரதச்சத்தைக் கொண்டுள்ளன. இந்நாட்டின் சில பகுதிகளே இந்த அன்றாட மூலத்தை தென்னிந்தியாவைப் போல மிக இயல்பாகச் சார்ந்துள்ளன.

இதிலுள்ள பெரிய வாய்ப்பு விழிப்புணர்விலேயே உள்ளது. அதிகமான இந்தியர்கள் தங்களின் அன்றாட உணவில் புரதச்சத்தைச் சேர்க்க தீவிரமாக முயற்சி செய்து வரும் நிலையிலும், நகர்ப்புற உயர் வருவாய் வீடுகளில் நடத்தப்பட்ட தேசிய அளவிலான ஆய்வில், நான்கில் மூன்று பங்கினர் புரதச் சத்து குறைபாட்டுடன் இருப்பது தெரியவந்துள்ளது. மேலும், ஒரு ஆரோக்கியமான முதியவருக்கு உடல் எடையில் ஒரு கிலோவிற்கு 0.66 முதல் 0.83 கிராம் வரை புரதச்சத்து தேவை என இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (ஐசிஎம்ஆர்) பரிந்துரைத்த போதிலும், 93 சதவீதமானோரால் ஒரு முதியவருக்கு நாளொன்றுக்கு எவ்வளவு புரதச்சத்து தேவை என்பதைச் சரியாகக் கூற முடியவில்லை. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இந்த இடைவெளி என்பது உணவில் என்ன இருக்கிறது என்பதில் இல்லை; ஏற்கனவே அங்கிருக்கும் புரதச்சத்தைச் சரியாகப் புரிந்து கொள்வதில்தான் உள்ளது.

அந்த இடைவெளியைக் குறைப்பது எப்படி என்பதற்குத் தென்னிந்தியா ஏற்கனவே முன்னுதாரணமாகத் திகழ்கிறது; அரசின் தரவுகளும் இதனை உறுதிப்படுத்துகின்றன. தேசிய குடும்ப சுகாதார ஆய்வின் (என்எஃப்ஹெச்எஸ்) படி, தேசிய அளவில் இந்தியர்களில் பாதியளவுக்கும் குறைவானவர்களே தினமும் பால் அல்லது தயிரைப் பயன்படுத்தும் நிலையில், தென்னிந்தியா முழுவதிலும் இந்த எண்ணிக்கை தேசிய சராசரியான 48.8 சதவீதத்தை விட மிகவும் அதிகமாக உள்ளது. ஆந்திரப் பிரதேசம் (77.1% ஆண்கள், 74.8% பெண்கள்) மற்றும் கர்நாடகா (76.2% ஆண்கள், 77.9% பெண்கள்) ஆகிய மாநிலங்கள் இதில் முன்னணியில் உள்ளன. தெலுங்கானா (68.9% ஆண்கள், 71.3% பெண்கள்), கேரளா (62.5% ஆண்கள், 59.4% பெண்கள்) ஆகிய மாநிலங்கள் அதற்கு அடுத்தபடியாக உள்ளன. பால் பொருட்கள் உணவின் ஓரத்தில் ஒதுக்கப்படாமல், அன்றாட உணவின் மையப் பகுதியாக இருக்கும் ஒரு பிராந்தியமாகத் தமிழ்நாடும் இதில் நிறைகிறது.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## பெட்ரோனாஸ் லூப்ரிகன்ட்ஸ் இந்தியா மற்றும் டாடா மோட்டார்ஸ் இணைந்து அளவிடக்கூடிய பயன்படுத்தப்பட்ட எண்ணெய் மறுசுழற்சி மாதிரியை முன்னோடியாகக் தொடங்குகின்றன



சென்னை 11, செப்டம்பர் 2026: பெட்ரோனாஸ் குழுமத்தின் ஒரு பகுதியும், மேம்பட்ட ஆட்டோமோட்டிவ் மற்றும் தொழில்துறை லூப்ரிகண்ட் தொழில்நுட்பத்தில் நம்பகமான பெயருமான பெட்ரோனாஸ் லூப்ரிகன்ட்ஸ் இந்தியா, மற்றும் இந்தியாவின் மிகப்பெரிய வணிக வாகன தயாரிப்பாளரான டாடா மோட்டார்ஸ் ஆகியவை, பயன்படுத்தப்பட்ட வாகன மசகு எண்ணெய்களைப் பொறுப்பான முறையில் சேகரிப்பதற்கும் மறுசுழற்சி செய்வதற்கும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (எம்ஓயூ) கையெழுத்திட்டுள்ளன. இரு நிறுவனங்களும் மஹாராஷ்டிரா மற்றும் தமிழ்நாடு முழுவதும் ஒரே நேரத்தில் ஒரு கட்டமைக்கப்பட்ட மற்றும் அளவிடக்கூடிய மாதிரியை முன்னோடியாகச் செயல்படுத்துகின்றன. இந்த கூட்டாண்மை, ஒரு முக்கியமான நிலைத் தன்மை சவாலுக்குத் தீர்வு காண இரண்டு முன்னணி நிறுவனங்களின் பரஸ்பர பலங்களை ஒன்றாகக் கொண்டு வருகிறது. மேலும், இது இந்தியா வின் வளர்ந்து வரும் நீட்டிக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு (இபிஆர் - எக்ஸ்டென்டட் புரொடியூசர் ரெஸ்பான்ஸிபிளிட்டி) கட்டமைப்பிற்கு இணங்குவதை ஆதரிக் கிறது மற்றும் நாட்டின் சுழற்சி பொருளாதார (சர்க்குலர் எக்னாமி) லட்சியங்களை முன்னோக்கி கொண்டு செல்கிறது.

“மறு-சுத்திகரிக்கப்பட்ட மூல எண்ணெயை (ரீ-ரீபைண்ட் பேஸ் ஆயில்) முடிக்கப்பட்ட லூப்ரிகண்டுகளில் மீண்டும் சேர்க்கப்படும் போதுதான் பயன்படுத்தப்பட்ட எண்ணெயில் உண்மையான சுழற்சித் தன்மை தொடங்குகிறது. டாடா மோட்டார்ஸ் உடனான எங்கள் கூட்டாண்மை, பயன்படுத்தப்பட்ட எண்ணெய் சுழற்சித் தன்மைக்கான சூரு அளவிடக்கூடிய மாதிரியை உருவாக்குவதற்கான ஒரு முக்கியமான அடியாகும். மேலும், எங்கள் செயல்பாடுகள் முழுவதும் கார்பன் தடத்தை கணிசமாகக் குறைப்பதற்காக நாங்கள் உழைக்கும் போது, இது எங்கள் விநியோகச் சங்கிலி வலையமைப்பின் பலத்தைப் பிரதிபலிக்கிறது” என்று முன்னோடி திட்டத்தைத் தொடங்கி வைத்து பெட்ரோனாஸ் லூப்ரிகண்ட் இந்தியா-வின் நிர்வாக இயக்குநர் திரு. பினு சாண்டி கூறினார்.

“டாடா மோட்டார்ஸ்-இல், நிலைத் தன்மையை ஊக்குவிக்கும் நடைமுறைகள் மற்றும் கூட்டாண்மைகள் சுழற்சி பொருளாதாரக் கொள்கைகளை மேம்படுத்துவதற்கும், ஆட்டோமோட்டிவ் மதிப்புத் தொடர் முழுவதும் குறிப்பிடத்தக்க சுற்றுச்சூழல் தாக்கத்தை உருவாக்குவதற்கும் ஒருங்கிணைந்த பகுதியாகும். பெட்ரோனாஸ் லூப்ரிகண்ட் இந்தியா உடனான எங்கள் கூட்டாண்மை மூலம், பயன்படுத்தப்பட்ட ஆட்டோமோட்டிவ் லூப்ரிகண்டுகளை சேகரித்தல், மீட்டெடுத்தல் மற்றும் மறுசுழற்சி செய்வதற்கான ஒரு கட்டமைக்கப்பட்ட அமைப்பை நிறுவுவதை நோக்கி நாங்கள் ஒரு குறிப்பிடத்தக்க அடியை எடுத்து வைக்கிறோம் என்று டாடா மோட்டார்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் உதிரிபாகங்கள் மற்றும் வாகனங்கள் அல்லாத வணிகப் பிரிவுத் தலைவர் திரு. விக்ரம் அகர்வால் கூறினார்.

## சுமதுரா குழுமம் ரூ.17,000 கோடி மதிப்பிலான முதலீட்டுத் திட்டத்தை அறிவித்துள்ளது; 2030-க்குள் பல்வேறு சொத்து வகைகளில் 45 மில்லியன் சதுர அடி பரப்பளவிலான கட்டுமானங்களை மேற்கொள்ள இலக்கு நிர்ணயித்துள்ளது

சென்னை 11, செப்டம்பர் 2026: இந்திய ரியல் எஸ்டேட் துறையில் தனது பயணத்தின் மூன்று தசாப்தங்களைக் குறிக்கும் வகையில், தென்னிந்தியாவின் மிகவும் நம்பகமான மற்றும் பன்முகத் தன்மை கொண்ட ரியல் எஸ்டேட் நிறுவனங் களில் ஒன்றான ‘சுமதுரா குரூப்’, 2027 முதல் 2030 வரையிலான நிதியாண்டுகளை உள்ளடக்கிய தனது அடுத்த நான்கு ஆண்டுகளுக்கான லட்சிய வளர்ச்சித் திட்டத்தை அறிவித்துள்ளது.

இந்த உத்தியின் ஒரு பகுதியாக, பெங்களூரு, ஹைதராபாத் மற்றும் சென்னை ஆகிய நகரங்களில் குடியிருப்பு, வணிகம் மற்றும் கிடங்கு சார்ந்த பிரிவுகளில் சுமார் 45 மில்லியன் சதுர அடி பரப்பளவிலான திட்டங்களை, ரூ.17,000 கோடி முதலீட்டில் மேற்கொள்ள இக்குழுமம் திட்டமிட்டுள்ளது.

ரியல் எஸ்டேட் துறையில் இக்குழுமம் 30 ஆண்டுகளை நிறைவு செய்யும் இந்த மைல்கல், குடியிருப்பு சார்ந்த நிறுவனமாகத் தொடங்கி, தற்போது பெங்களூரு, ஹைதராபாத் மற்றும் சென்னை ஆகிய நகரங்களில் விரிவான செயல்பாடுகளையும் பல்வேறு வகையான சொத்து வகைகளில் வளர்ந்து வரும் திட்டங்களையும் கொண்ட பன்முகத் தன்மை வாய்ந்த ரியல் எஸ்டேட் குழுமமாக அது அடைந்துள்ள வளர்ச்சியையும் பரிணாமத்தையும் பிரதிபலிக் கிறது.

குடியிருப்பு விரிவாக்கம்

தனது குடியிருப்புத் திட்டங்களின் யூகுப்பை வலுப்படுத்தும் விதமாக, இக்குழுமம் தனது முக்கியச் சந்தைப் பகுதிகளில் சுமார் 35 மில்லியன் சதுர அடி பரப்பளவிலான திட்டங்களை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளது; இவற்றின் மொத்த மேம்பாட்டு மதிப்பு (ஜிடிவி) சுமார் ரூ.38,000 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

சொகுசு வில்லா பிரிவில் களமிறங்கவும், பெங்களூரு, ஹைதராபாத் மற்றும் சென்னை ஆகிய நகரங்களில் வேகமாக வளர்ந்து வரும் குறிப்பிட்ட சில பகுதிகளில் தனது நில இருப்பை விரிவுபடுத்தவும் இக்குழுமம் திட்டமிட்டுள்ளது.

வணிக ரீதியான ரியல் எஸ்டேட்

வணிகச் செயல்பாட்டுப் பிரிவில், சுமார் 4.2 மில்லியன் சதுர அடி பரப்பளவிலான ‘கிரேட் ஏ’ தரத்திலான அலுவலக இடங்களை உருவாக்க சுமதுரா குழுமம் திட்டமிட்டுள்ளது; இதன் மூலம் ஆண்டுக்கு சுமார் ரூ.680 கோடி வாடகை வருவாய் ஈட்ட வாய்ப்புள்ளது.

பெங்களூரின் ‘அவுட்டர் ரிங் ரோடு’ (ஓஆர்ஆர்) பகுதியில் உள்ள ‘கிரேட் ஏ’ வணிக ரீதியிலான ரியல் எஸ்டேட் சந்தையில், இக்குழுமம் தனது இருப்பை மேலும் வலுப்படுத்தத் தயாராகி வருகிறது.

இந்த விரி வாக்கம், வருமானம் ஈட்டும் சொத்துகளின் கணிசமான தொகுப்பை உருவாக்குவதோடு, வணிக ரீதியிலான அதன் செயல்பாட்டுத் தளத்தையும் வலுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## குரு சோமசுந்தரம் - அனுமோல் நடிக்கும் ‘பாரிஸ் கஃபே’ செப்டம்பர் 18ஆம் தேதி வெளியாகிறது!




சென்னை 11, செப்டம்பர் 2026: குரு சோமசுந்தரம், அனுமோல் முன்னணி கதாபாத்திரங்களில் நடித்துள்ள பெரும் எதிர்பார்ப்புக்குரிய உணர்வுப்பூர்வமான காதல் திரைப்படமான ‘பாரிஸ் கஃபே’, வரும் செப்டம்பர் 18, 2026 அன்று உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகிறது. இயக்குநர் சராஜ் சீலன் இயக்குநராக அறிமுகமாகும் இப்படம், காதல், உறவுகள் மற்றும் எதிர்பாராத சம்பவங்கள் ஒரு குடும்பத்தின் வாழ்க்கைப் பாதையை எவ்வாறு மாற்றியமைக்கின்றன என்பதை உணர்வுப்பூர்வமாகப் பதிவு செய்கிறது.

சில வாரங்களுக்கு முன்பு வெளியான இப்படத்தின் டிரெய்லர், ரசிகர்கள் மற்றும் திரையுலகினர் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது. இதற்கு முன்பாக, ஜூன் 5, 2026 அன்று இயக்குநர் சசிகுமார் வெளியிட்ட படத்தின் டீசரும் ரசிகர்களிடையே எதிர்பார்ப்பை அதிகரித்தது. படத்தின் கதைக்களம் மற்றும் கதாபாத்திரங்களின் உலகத்தைப் பற்றிய ஒரு சிறிய பார்வையை வழங்கிய அந்த டீசர், ‘பாரிஸ் கஃபே’ மீதான ஆர்வத்தை மேலும் தூண்டியது.

குரு சோமசுந்தரமும் அனுமோலும், மகிழ்ச்சியான திருமண வாழ்க்கையை வாழ்ந்து வரும் தம்பதியாக நடித்துள்ளனர். அழகான குடும்ப வாழ்க்கை எதிர்பாராத ஒரு திருப்பத்தால் பாதிக்கப்பட, அதன் பின்னர் அந்தக் குடும்பத்தில் ஏற்படும் உணர்வுப் போராட்டங்களே படத்தின் மையக்கருவாக அமைந்துள்ளன. சூழ்நிலைகளால் சோதிக்கப்படும் உறவுகள், கடினமான முடிவுகளால் சவாலுக்குள்ளாகும் காதல் மற்றும் மீண்டும் ஒன்றிணைவதற்காகப் போராடும் ஒரு குடும்பத்தின் உணர்வுப்பூர்வமான பயணத்தை டிரெய்லர் அழுத்தமாக வெளிப்படுத்துகிறது.

படத்தின் தலைப்புக்கு ஏற்றவாறு, பிரான்ஸின் பாரிஸ் நகரமும் கதையின் முக்கிய அம்சமாக இடம்பெற்றுள்ளது. பாரிஸின் அழகிய காட்சிகளை உணர்வுப்பூர்வமான கதை சொல்லலுடன் அழகாக இணைத் திருக்கிறது டிரெய்லர். காதல், குடும்ப உறவுகள் மற்றும் பாரிஸின் அழகிய பின்னணி ஆகியவற்றின் கலவையானது இப்படத்திற்கு தனித்துவமான காட்சியமைப்பையும் கதை சொல்லும் பாணியையும் வழங்குகிறது.

செப்டம்பர் 18, 2026 அன்று உலகம் முழுவதும் திரையரங்குகளில் ‘பாரிஸ் கஃபே’ வெளியாகிறது.

*நடிகர்கள்*

குரு சோமசுந்தரம், அனுமோல், விஜய் விஸ்வா, அர்ச்சனா குமார், சாய் விக்கி, நயனா சாய், பிபின்.

## கர்னல் சாண்டர்ஸின் பிறந்தநாளுக்காக, சென்னையின் அடையாளமான ஆட்டோரிக்ஷாக்களுக்கு ஒரு FINGER LICKIN’ GOOD மேக்ஓவரை கேஎஃப்சி வழங்கியுள்ளது



சென்னை 11, செப்டம்பர் 2026: நீங்கள் சென்னையில் நேரம் செலவிட்டிருந்தால், அவற்றைப் பார்த்திருப்பீர்கள். போக்குவரத்தில் ஊடுருவிச் செல்லும் மஞ்சள் ஆட்டோக்கள், ஒலிக்கும் குத்துப் பாடல்கள் மற்றும் நகரத்தின் ஒவ்வொரு குறுக்குவழியும் தெரிந்த ஆட்டோ அண்ணாக்கள்.

அவை ஒரு இடத்திற்குச் செல்வதற்கான வெறும் வாகனம் என்பதை விட மேலானவை. இந்த அடையாளமான ஆட்டோக்கள் சென்னையை சென்னையாக மாற்றுவதில் ஒரு முக்கியப் பகுதியாகும்.

எனவே, கர்னல் சாண்டர்ஸின் பிறந்த நாளுக்காக, கேஎஃப்சி கொண்டாட்டங்களை தனது உணவகங்களில் இருந்து வெளியே தெருக்களுக்குக் கொண்டு சென்றது.

இந்த வாரம், ஒரு பழக்கமான மஞ்சள் ஆட்டோ எங்கோ ஒரு சிறப்பான இடத்திற்குச் செல்வது போல் காட்சியளித்ததால் சென்னை வாசிகள் வியந்து திரும்பிப் பார்த்தனர். சிவப்பு மற்றும் வெள்ளை நிறங்களில் அலங்கரிக்கப்பட்டு, பிறந்தநாள் விளக்குகள், அலங்காரங்கள் மற்றும் ஒரு பார்ட்டி தொப்பியுடன் முழுமையடைந்து, இது சக்கரங்களில் நடக்கும் ஒரு உண்மையான பிறந்தநாள் பார்ட்டியாக இருந்தது.

மேலும் முன் இருக்கையில் பயணம் செய்தது யார்? நாட்டுச் சின்னமான கர்னல் சாண்டர்ஸ் அவர்களே தான். அல்லது, சென்னை அவரை அழைக்க விரும்புவது போல், கர்னல் அண்ணா சாண்டர்ஸ்.

கட்டம் போட்ட லுங்கி, அவரது தனித்துவமான ஜாக்கெட் மற்றும் போலோ ஷர்ட், மற்றும் ஒரு ஜோடி ஸ்டேட்மென்ட் கூலிங் கிளாஸ் அணிந்து கொண்டு, கர்னல் நகரத்தை வலம் வந்து, கோழி இறைச்சி பிரியர்களை கேஎஃப்சி அண்ணா நகர்-இல் நடைபெறும் தனது பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு அழைப்பதைக் காண முடிந்தது.

பார்ட்டி தொப்பி அணிந்த ஆட்டோ அனைவரின் கவனத்தையும் ஈர்க்க அதிக நேரம் எடுக்கவில்லை. ஆர்வத்துடன் திரும்பிப் பார்ப்பது மொபைல் போன் கேமராக்களாக மாறியது, ஏனெனில் நகரத்தின் மிகவும் அடையாளமான வாகனம் இன்னும் சிறப்பான ஒரு மேக்ஓவரைப் பெறுவதைப் படம் பிடிக்க சென்னை வாசிகள் நின்றனர்.

பிறந்தநாள் பயணம் இறுதியாக கேஎஃப்சி அண்ணா நகர்-இல் வந்து நின்றது, அங்கு ரசிகர்கள் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டனர்,

கேஎஃப்சி-இன் பை 1, கெட் 1 கிரிஸ்பி சிக்கன் பக்கெட் சலுகையைப் பெற்றனர் மற்றும் இந்த சீசனின் மிகவும் பிரபல மான துணைப் பொரு ளான கேஎஃப்சி பக்கெட் ஹேட்-ஐப் பெற்றுச் சென்றனர்.

கர்னல் சாண்டர்ஸின் பிறந்தநாள் என்று வரும்போது, சென்னை தனக்கு வழங்கப்பட்ட பணியை மிகச் சரியாகப் புரிந்து கொண்டது.

## எண்டெமோல் ஷைன் இந்தியாவின் 'பிக் பாஸ் தமிழ்' ஜியோஹாட்ஸ்டாரில் முதலிடத்தைப் பிடித்து, தமிழ் பொழுதுபோக்கு உலகில் தனது ஆதிக்கத்தை மீண்டும் நிரூபித்தது!

சென்னை 11, செப்டம்பர் 2026: நடிகர் விஜய் சேதுபதி தொகுத்து வழங்கும் எண்டெமோல் ஷைன் இந்தியாவின் 'பிக் பாஸ் தமிழ்', ஜியோஹாட்ஸ்டாரின் தமிழ் பிரிவில் முதலிடத்தைப் பிடித்து, தமிழ் பொழுதுபோக்கு தளத்தில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகிறது. சமீபத்திய தரவரிசையின்படி, 'பிக் பாஸ் தமிழ்' நிகழ்ச்சி முதலிடத்தை பிடித்திருப்பது பார்வையாளர்கள் மத்தியில் நிலவும் மிகப்பெரிய வரவேற்பையும் ஈடுபாட்டையும் காட்டுகிறது. தொலைக்காட்சி, டிஜிட்டல் தளங்கள் மற்றும் சமூக வலைதளங்களில் தொடர்ந்து பேசுபொருளாகவும் 'பிக் பாஸ் தமிழ்' இருந்து வருகிறது.

ஜியோஹாட்ஸ்டாரின் தமிழ் பிரிவில் பிக் பாஸ் தமிழ் முதலிடத்தைப் பிடித்திருப்பது, தமிழ் மார்க்கெட்டில் மிகவும் வலுவான ரியாலிட்டி பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஒன்றாக தொடர்ந்து வருவதை மேலும் உறுதிப்படுத்துகிறது. தமிழ்நாடு முழுவதும் உள்ள பார்வையாளர்களுடன் இந்த நிகழ்ச்சி நெருக்கமாக இருப்பதையும் இந்த சாதனை எடுத்துக்காட்டுகிறது.

இந்த வெற்றி, பனிஜே ஏசியாவின் ஒரு பகுதியாக செயல்படும் எண்டெமோல் ஷைன் இந்தியாவின் வலிமையையும் எடுத்துக் காட்டுகிறது. இந்தியாவில் 'பிக் பாஸ்' பிரான்சைஸ் நிகழ்ச்சியை தயாரித்து வரும் எண்டெமோல் ஷைன் இந்தியா, உலகளவில் வெற்றிபெற்ற நிகழ்ச்சி வடிவங்களை இந்தியாவின் பல்வேறு மொழி மற்றும் பிராந்திய பார்வையாளர்களுக்கு ஏற்றவாறு உருவாக்குவதில் சிறப்பான அனுபவத்தைக் கொண்டுள்ளது. இதன் மூலம்



'பிக் பாஸ்' நிகழ்ச்சியை பல்வேறு சந்தைகளில் வலுவான பொழுதுபோக்கு பிரான்சைஸாக எண்டெமோல் ஷைன் இந்தியா உருவாக்கியுள்ளது.

தற்போது ஜியோ ஹாட்ஸ்டாரில் பல்வேறு மொழிப் பிரிவுகளில் பிக் பாஸ் முதலிடத்தைப் பிடித்துள்ள நிலையில், இந்த பிரான்சைஸ் நிகழ்ச்சி நாடு முழுவதும் தனக்குள்ள அபாரமான வரவேற்பை தொடர்ந்து நிரூபித்து வருகிறது. அதேவேளையில், 'பிக் பாஸ் தமிழ்' முதலிடத்தைப் பிடித்திருப்பது, தமிழ் பார்வையாளர்கள் மத்தியில் நிகழ்ச்சிக்குள்ள வலுவான வரவேற்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

இந்த ஆண்டு ஒரே நாளில் தொடங்கிய 'பிக் பாஸ் சவுத் கார்னிவல்' நிகழ்ச்சியால் தென்னிந்திய ரசிகர்கள் உற்சாகமடைந்துள்ளனர். தொடக்க நிகழ்ச்சியை மேலும் சுவாரஸ்யமாக்கும் வகையில், அந்தந்த மொழிப் பதிப்புகளின் பிரபல தொகுப்பாளர்களான மோகன்லால் (மலையாளம்), நாகார்ஜுனா (தெலுங்கு), கிச்சா சுதீப் (கன்னடம்) மற்றும் விஜய் சேதுபதி (தமிழ்) ஆகியோர் தங்களது நிகழ்ச்சிகளில் இருந்து ஒன்றாகத் தோன்றி, ஒருவருக்கொருவர் வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன், 'பிக் பாஸ் சவுத் கார்னிவல்' நிகழ்ச்சி பிரமாண்ட வெற்றியடைய வாழ்த்தினர்.

## சிபிசிஎல் ஆதரவுடன் நடைபெறும் சென்னை ஓபன் 2026 போட்டியில் அஜிதேஷ் சந்து தனது முன்னிலையை மூன்று ஷாட்களாக உயர்த்தினார்




சென்னை 11, செப்டம்பர் 2026: டிஎன்ஜிஎஃப் காஸ்மோ கோல்ஃப் மைதானத்தில் நடைபெறும், ரூ. 1 கோடி பரிசுத்தொகை கொண்ட 'சென்னை ஓபன் 2026' (சிபிசிஎல் ஆதரவுடன்) போட்டியின் மூன்றாம் சுற்றில், அஜிதேஷ் சந்து 'போகி' ஏதுமின்றி 4-அண்டர் 68 ஸ்கோரைப் பதிவு செய்து, தனது முன்னிலையை மூன்று ஷாட்களாக உயர்த்தினார்.

சண்டிகரைச் சேர்ந்த 37 வயதான கோல்ஃப் வீரரான இவர் (ஸ்கோர்கள்: 65-66-68), இரண்டு ஷாட் முன்னிலையுடன் ஆட்டத்தைத் தொடங்கி, நான்கு 'பேர்டிகள்' அடங்கிய பிழையற்ற ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இதன் மூலம் இறுதிச் சுற்றுக்குச் செல்லும்போது அவர் 17-அண்டர் 199 என்ற நிலையை எட்டியுள்ளார்.

கொல்கத்தாவைச் சேர்ந்த விராஜ் மடப்பா (72-67-63), அன்றைய தினத்தின் மிகக்குறைந்த ஸ்கோரான 9-அண்டர் 63-ஐப் பதிவு செய்தார். இதனால் அவர் 11-வது இடத்தைப் பகிர்ந்து கொண்ட நிலையிலிருந்து ஒன்பது இடங்கள் முன்னேறி, 14-அண்டர் 202 ஸ்கோருடன் இரண்டாவது இடத்தைப் பிடித்தார்.

இரண்டு முறை டிபி வேர்ல்டு பிஜிடிஐ பட்டத்தை வென்றவரும், முன்னாள் ஆசிய டூர் சாம்பியனுமான 28 வயதான இவர், இன்றைய சுற்றில் 'பார்-4' கொண்ட ஆறாவது ஹோலில் ஒரு 'ஈகிள்' அடித்ததுடன், எட்டு 'பேர்டிகள்' மற்றும் ஒரு 'போகி' ஆகியவற்றையும் பதிவு செய்தார்.

முந்தைய நாள் முடிவில் இரண்டாவது இடத்தில் இருந்த செக் குடியரசின் ஸ்டீபன் டாளெக் (65-68-70), 13-அண்டர் 203 ஸ்கோருடன் மூன்றாவது இடத்திற்குச் சரிந்தார். 29 வயதான இவரது 2-அண்டர் 70 ஸ்கோரில், 'பார்-5' கொண்ட 18-வது ஹோலில் ஒரு 'ஈகிள்', மூன்று 'பேர்டிகள்', ஒரு 'போகி' மற்றும் ஒரு 'டபுள் போகி' ஆகியவை அடங்கும்.

ஐந்து முறை டிபி வேர்ல்டு பிஜிடிஐ பட்டத்தை வென்றவரும், முன்னாள் ஆசிய டூர் சாம்பியனுமான அஜிதேஷ், ஒரு ஷாட் கூட இழக்காமல் முன்னிலையில் இருப்பதன் கூடுதல் அழுத்தத்தை வெற்றிகரமாகக் கையாண்டதில் மகிழ்ச்சி தெரிவித்தார்.

## சூர்யாவின் 'சீன்' படத்தின் டைட்டில் & டைட்டிலுக்கான டீசர் வெளியீடு

சென்னை 11, செப்டம்பர் 2026: ழகரம் ஸ்டுடியோஸ் - 2 என்டர்டெய்ன்மென்ட் ஆகிய நிறுவனங்களின் தயாரிப்பில் இயக்குநர் ஜித்து மாதவன் இயக்கத்தில் சூர்யாவின் ரூடிப்பில் தயாராகி வரும் #சூர்யா 47 படத்திற்கு 'சீன்' என பெயரிடப்பட்டு, டைட்டிலுக்கான டீசர் வெளியிடப்பட்டிருக்கிறது. அத்துடன் இந்த திரைப்படம் எதிர்வரும் நவம்பர் மாதம் ஆறாம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இயக்குநர் ஜித்து மாதவன் இயக்கத்தில் உருவாகியுள்ள 'சீன்' திரைப்படத்தில் சூர்யா, நஸ்ரியா நசீம், நஸ்லென், ஆனந்தராஜ், லால், ராஜ் பிரியன் உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள். வினித் அகஸ்டியன் ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்த திரைப்படத்திற்கு சுஷின் ஷியாம் இசையமைத்திருக்கிறார். படத்தொகுப்பு பணிகளை அஜ்மல் ஷபு மேற்கொள்ள கலை இயக்கத்தை அஸ்வினி காலே கையாண்டிருக்கிறார். காமெடி வித் ஆக்சன் என்டர்டெய்னராக தயாராகி இருக்கும் இந்த திரைப்படத்தை ழகரம் ஸ்டுடியோஸ் மற்றும் 2 டி என்டர்டெய்ன்மென்ட் ஸ்டுடியோஸ் ஆகிய நிறுவனங்கள் சார்பில் தயாரிப்பாளர்கள் ஜோதிகா - சூர்யா ஆகியோர் இணைந்து தயாரித்திருக்கிறார்கள். இத்திரைப்படத்தில் ஜெயஸ்ரீ தாமோதரன் இணை தயாரிப்பாளராக பொறுப்பேற்றிருக்கிறார்.




இப்படத்தின் தொழில்நுட்ப பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வரும் நிலையில், படத்திற்கு 'சீன்'என பெயரிடப்பட்டு, அதற்கான பிரத்யேக காணொளியும் வெளியிடப்பட்டிருக்கிறது. இதில் சூர்யாவின் இன்பராஜ் ஐபிஎஸ்ஸின் கதாபாத்திர தோற்றம் - அவரின் திரை ஆளுமை - உரையாடல் - பின்னணி இசை - அனைத்தும் மாஸாக இருப்பதால்.. ரசிகர்களை உற்சாகப்படுத்தி இருக்கிறது. மேலும் இந்தத் திரைப்படம் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு எதிர்வரும் நவம்பர் மாதம் ஆறாம் தேதி வெளியாகிறது என்பதால்.. "சிகர்களுக்கு 'ஹாட்ரிக் டமாக்கா' என கொண்டாடப்பட்டு வருகிறது.

இதனிடையே 'கருப்பு', 'விஸ்வநாத் & சன்ஸ்' என தொடர்ந்து ரசிகர்களை மகிழ்வித்து வரும் சூர்யா... ஹாட்ரிக் வெற்றியை 'சீன்' மூலம் வழங்குவதற்காக தயாராகி இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கவித்துவமான காதல், கண்கவரும் காட்சிகள், ரசிக்க வைக்கும் கெமிஸ்ட்ரியுடன் மனம் வருடும் அழகிய காதல் கவிதையாக வெளியாகியுள்ளது 'ஹைக்கூ' திரைப்பட டீசர்!

சென்னை 11, செப்டம்பர் 2026: விஷன் சினிமா ஹவுஸ் தயாரிப்பில், ஏகன் நடிப்பில் உருவாகியுள்ள காதல் திரைப்படமான 'ஹைக்கூ' திரைப்படத்தின் டீசரை ரொமாண்டிக் ஹீரோ ஹரிஷ் கல்யாண் வெளியிட்டுள்ளார். கண்ணைக் கவரும் பிரமாண்டமான காட்சியமைப்புகள், இளமைத் துள்ளல் நிறைந்த தருணங்கள் மற்றும் ரசிக்க வைக்கும் காதல் உணர்வுகளுடன், புத்துணர்ச்சியான ஒரு காதல் உலகத்தை இந்த டீசர் ரசிகர்களுக்கு அறிமுகப்படுத்தி படத்தின் மீதான எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளது.

இந்த அழகான கதையில் ஏகன், ஸ்ரீதேவி மற்றும் ஃபெமினா ஜார்ஜ் இருவரும் முன்னணி கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இருவர்களுக்கிடையேயான கெமிஸ்ட்ரியும், உணர்வுப்பூர்வமான நடிப்பும் டீசரின் சிறப்பம்சங்களில் ஒன்று. 'கோழிப் பண்ணை செல்லதுரை' படத்தில் தனது இயல்பான மற்றும் கிராமத்து கதாபாத்திர நடிப்பால் பாராட்டைப் பெற்ற ஏகன், இப்படத்தில் முற்றிலும் மாறுபட்ட தோற்றத்தில், நவீனமான, கூலான மற்றும் அப்பாவித்தனம் நிறைந்த இளைஞராக நடித்துள்ளார். அவருக்கு இணையாக ஸ்ரீதேவியும், ஃபெமினா ஜார்ஜும் தங்களது அழகான நடிப்பால் கவனம் ஈர்க்கின்றனர். இவர்களுக்கிடையேயான இயல்பான கெமிஸ்ட்ரி டீசரின் இனிமையான தருணங்களுக்கு மேலும் வலு சேர்க்கிறது.

'ஹைக்கூ' படத்தின் காதல் உணர்வுகளுக்கு சித்து குமாரின் இசை கூடுதல் உயிர் கொடுக்கிறது. குறிப்பாக, கிளாசிக்கல் ராகங்களுடன் இணைந்த மென்மையான வயலின் இசையும், நவீன ஃபியூஷன் இசையும் டீசரின் இதமான காட்சியமைப்புடன் அழகாகப் பொருந்துகின்றன. அவரது பின்னணி இசை, டீசருக்கு மயக்கும் இசை அனுபவத்தை வழங்குகிறது. குறுகிய நேரத்தில், பார்வையாளர்களை ஒரு வண்ணமயமான காதல் உலகிற்குள் அழைத்துச் செல்லும் அனுபவத்தை டீசர் உருவாக்குகிறது. எழுத்தாளர் மற்றும்



இயக்குநர் யுவராஜ் சின்னசாமியின் புதுமையான திரை அணுகுமுறை, அனைவருக்கும் பரிச்சயமான காதல் உணர்வுகளை புத்துணர்ச்சியுடன் தருகிறது.

மேலும், படத்தின் மீதான எதிர்பார்ப்பை அதிகரிக்கும் வகையில், 'ஹைக்கூ' திரைப்படத்தின் திரையரங்க வெளியீட்டுக்குப் பிந்தைய டிஜிட்டல் ஸ்ட்ரீமிங் உரிமையை நெட்ஃபிலிக்ஸ் நிறுவனம், படப்பிடிப்பு நிறைவடைவதற்கு முன்பே ணைரப்பற்றியுள்ளது.

படத்தின் புதுமையான கதை மற்றும் தனித்துவமான திரை அணுகுமுறை ஒடிடி தளத்தின் கவனத்தை ஈர்த்ததைத் தொடர்ந்து, இந்த டிஜிட்டல் உரிமை கணிசமான தொகைக்கு பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுவராஜ் சின்னசாமி எழுதி இயக்கியுள்ள இப்படத்தை டாக்டர் டி. அருளானந்து மற்றும் மாத்யூ அருளானந்து ஆகியோர் விஷன் சினிமா ஹவுஸ் நிறுவனத்தின் சார்பில் தயாரித்துள்ளனர். இப்படத்தில் ஏகன், ஸ்ரீதேவி மற்றும் ஃபெமினா ஜார்ஜ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். ஹரி ஹரன் ராம் கூடுதல் திரைக்கதையில் பங்களித்துள்ளார். பிரியேஷ் குருசாமி ஒளிப்பதிவை மேற்கொண்டுள்ளார். சக்தி பிரணேஷ் படத்தொகுப்பை கவனிக்க, சித்து குமார் இசையமைத்துள்ளார். பிரேம் கலை இயக்குநராக பணியாற்றியுள்ளார்.

காதல் உலகத்தின் அழகிய அனுபவத்தை ரசிகர்களுக்கு வழங்கும் வகையில் வெளியாகியுள்ள டீசரை தொடர்ந்து, 'ஹைக்கூ' திரைப்படம் அக்டோபர் 23, 2026 அன்று உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்